அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

# மக்களின் நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்து வளர்ச்சிக்கு வழிகோலும் பட்ஜெட் சமக தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

அ.எண்:47/2016
தேதி : 29/02/2016

நாடாளுமன்றத்தில் 2016 – 17 ஆம் ஆண்டுக்கான மத்திய பொது நிதி நிலை அறிக்கை பல்வேறு சிறப்பம்சங்களுடன் நிதியமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மாற்றத்தை உருவாக்குவதற்கு விவசாயம், ஊரக வளர்ச்சி, சமூக நலம், கல்வி, திறன் மற்றும் வேலை வாய்ப்பு, கட்டமைப்பு, நிதித்துறை சீர்திருத்தம், விவேகமுள்ள பொருளாதாரக் கொள்கை, நிதி நிர்வாக ஒழுங்கு, வரி விதிப்பு சீர்திருத்தங்கள் என்ற ஒன்பது தூண்களை அடிப்படையாகக் கொண்டு நிதிநிலை அறிக்கை சிறப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வருமானத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் இரட்டிப்பாக்கும் வகையில் நடவடிக்கை, புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு 5500 கோடி ஒதுக்கீடு, வேளாண் சந்தைகள் இணையதளம் மூலம் இணைப்பு, நீர்ப்பாசன திட்டத்திற்கு 20000 கோடி நிதி, விவசாய கடன் 9 லட்சம் கோடி அளவு இலக்கு, 3 ஆண்டுகளில் 5 லட்சம் ஏக்கர் நிலங்களில் இயற்கை வேளாண்மை என்ற அறிவிப்புகள் விவசாயத் துறையை மேம்படுத்தும் நல்ல திட்டங்களாகும்.

கிராமப் பஞ்சாயத்துகள் நகராட்சிகளுக்கு 2.87 லட்சம் கோடி ஒதுக்கீடு என்னும் நிதி கமிஷன் பரிந்துரை நாடு முழுவதும் சரி சமமான வளர்ச்சிக்கு வழிகோலுவதாக அமையும்.

பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 9000 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 2018 மே முதல் தேதிக்குள் அனைத்து கிராமங்களுக்கும் 100 சதவிகித மின்சார வசதி, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு கடந்த ஆண்டுகளை விட மிக அதிகமாக 38500 கோடி ரூபாய் ஒதுக்கீடு, முதியோருக்கு 1 லட்சம் ரூபாய் மருத்துவ காப்பீடு, முத்ரா வங்கி மூலம் 1.80

லட்சம் கோடி கடன் உதவி சாலை வசதியை மேம்படுத்த 55 ஆயிரம் கோடி, கிராமப்புறங்களில் 6 கோடி இல்லங்களில் டிஜிட்டல் கல்வித்திட்டம், உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு அடிகோலுவதாக அமையும்.

வருமான வரி செலுத்துபவர்களுக்கு உச்ச வரம்பை உயர்த்தவில்லை என்ற குறை இருந்தாலும், 5 லட்சம் ரூபாய்க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்கு ரூ.5000 வரை வரிச்சலுகையை அறிவித்திருப்பதும், வாடகை வீடுகளில் வசிப்பவர்களுக்கு வரி கழிவு 24,000 ரூபாய் முதல் 60,000 ரூபாய் வரை அதிகரித்திருப்பதும், 35 லட்சம் ரூபாய் வீட்டுக் கடன் வட்டிக்கு 50,000 ரூபாய் கூடுதல் வரிச்சலுகை அளித்திருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு 229246 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது இந்தியாவை வளர்ந்த நாடுகளின் வரிசையில் கொண்டு செல்ல வைக்கும் நல்லதொரு பொருளாதாரச் சிந்தனையாகும்.

மொத்தத்தில் இந்த பொது பட்ஜெட் அனைத்துத் துறைகளின் வளர்ச்சியை மனதில் கொண்டு பிரதமர் மோடி அவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை, எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாகவும், நாட்டின் தொடர் வளர்ச்சிக்கு வித்திடும் விதமாகவும் அளிக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் பாராட்டி வரவேற்கிறேன்.

நன்றி,வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்